மாண்புமிகு திரு. க. இராசாராம் : தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. ரங்கநாதன் : சத்தியா ஸ்டுடியோஸ் தொழிலாளர்களுக்குச் சொந்தமாக்கப்படும் என்று சொல்லப்பட்டு உறவினர்களுக்குத் தான் சொந்தமாக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அதுபற்றிய தகவல் தற்போது என்னிடத்தில் எதுவும் இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : இந்த ஸ்டுடியோவில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் தங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று குறிப்பிடுகிறார்கள். அரசாங்கமும் இதுபற்றிக் கவலை கொள்ளவில்லை என்று கூறுகிறார்கள். இது குறித்து அமைச்சர் அவர்கள் கருத்து என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தொழிலாளர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு தொழிலாளர் நலத்துறை மூலமாக அளிக்கப்பட்டிருக்கிறது. எற்கனவே சொன்னபடி நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டிருக்கிறது. தீர்ப்பு வந்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கோவை செழியன் : இந்தத் தொழிலாளர்கள் சம்பந்தமான கன்சிலியேஷனில் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் 24—6—1974-ல் முக்கூட்டுப் பேச்சுக்கு வரவில்லை என்பது உண்மையா ? இன்றைக்கு ஒர்க்கர்ஸ் கம்பைன்ஸ் என்ற பெயரிலே சத்தியா ஸ்டுடியோ தொழிலாளர்களுடைய பெயரால் லீசுக்கு விடப்பட்டிருப்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நான் எற்கனவே சொன்னது போல பிரச்சினைகள் நடுவர் தீர்ப்பில் இருக்கின்றன. லீசுக்கு விடப்பட்டிருக்கிறதா இல்லையா என்ற தகவல் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

திரு. கு. காமாட்சி : இந்தமாதிரி தொழிலாளர்கள் பிரச்சினையில் முடிவுக்கு வராத ஸ்தாபனங்களை நேஷனலைஸ் பண்ண அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இது நல்ல ஆலோசனை.

சேலம், கோவை மாவட்டங்களில் பேருந்து உரிமங்கள்

* 354 வினா—திரு. க. சுப்பு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், கோவை மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் காலாவதியாக இருக்கும் பேருந்து உரிமங்கள் எத்தனை ?

(ஆ) அவற்றில் புதுப்பிக்கப்பட உள்ள உரிமங்கள் எத்தனை ?

1975 மார்ச் 17]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

	சேலம் மாவட்டம்.	கோவை மாவட்டம்.
(அ) 1974-ம் ஆண்டில் காலாவதியான பேருந்து அனுமதிச் சீட்டுகள்.	253	504
(இ) அவற்றில் புதுப்பிக்கப்பட்டவை ...	229	355

உதகை—சென்னை விரைவுப் பேருந்துகள்.

*355 வினா—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) உதகையிலிருந்து சென்னைக்கு துரித பஸ் விடுவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போதிலிருந்து விடப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தற்போது இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கு. அ. பொம்மன் : ஏற்கனவே, சீசன் காலத்தில் சென்னை யில் இருந்து உதகைக்கு துரித பஸ் விடப்பட்டிருந்தது நின்றுவிட்டது. மறுபடியும் சீசனுக்கு என்று இல்லாமல் நிரந்தரமாக பஸ் ஓட்ட அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சீசன் காலத்தில் மறுபடியும் விடப்படும். ஆனால் நிரந்தரமாக விடப்படமாட்டாது.

புலவர் சி. பழனிச்சாமி : சென்னையிலிருந்து பழனிக்கும், பழனி யிலிருந்து சென்னைக்கும் காலை, மாலை இரண்டு நேரங்களிலும் பஸ்கள் வந்து போகின்றன. காலையில் வருகிற பஸ் காலையிலேயே திரும்புகிறது. மாலையில் வருகிற பஸ் மாலையிலேயே திரும்புகிறது. இதனால் சில சமயங்களில் பேருந்துகள் இடைவெளியில் நின்று விடுவதோடு கூட தாமதமும் ஆகிறது. ஆகவே, இதைத் தவிர்க்க காலையில் வருகிற பஸ் மாலையில் திரும்பவும், மாலையில் வருகிற பஸ் காலையில் திரும்பவும் ஆன முறையினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த விவரம் சரியாக இருக்குமானால் அதைப் பற்றி அரசாங்கம் ஆலோசிக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சென்னையிலிருந்து புறப்படுகிற விரைவு வண்டி மதுரை, செங்கோட்டை வழியாக கொல்லத்திற்குப் போகிறதா ?